

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் நகர ரஜினி காந்த் மன்ற செயலாளர் ம.சுரேஷ்காந்த் தலைமையில் 30பேர் சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் – கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

### தமிழ்நாட்டில் வாக்குப்பதிவு சதவீதத்தில்

# பாளையங்கோட்டைக்கு கடைசி இடம்!

## 68.97% பேர் மட்டுமே வாக்களித்தனர்!

நெல்லை, ஏப். 27 - தமிழ்நாட்டிலேயே பாளையங்கோட்டை சட்டமன்றத்தொகுதி வாக்குப்பதிவு சதவீதத்தில் கடைசி இடம் பிடித்துள்ளது. தென்னகத்தின் ஆக்ஸ்போர்டு என்று அழைக்கப்படுவது பாளையங்கோட்டை. இங்கு 100 ஆண்டு பழமையான பள்ளிகள், கல்லூரிகள் உள்ளன. இங்கு படித்தவர்கள், அரசியல், நீதித்துறை என பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகின்றனர். குறிப்பாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் திருநாவுக்கரசர் ஆகியோர் பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் படித்தவர்கள் என்ற பெருமை உண்டு. இவ்வளவு பெருமைகளை கொண்ட பாளையங்கோட்டை தொகுதி வாக்குப்பதிவு சதவீதத்தில் தமிழ்நாட்டில் கடைசி இடத்தை பிடித்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்த விவரம் வருமாறு: தமிழ்நாட்டில் சட்டமன்றத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு (23ம் தேதி) நடந்தது. 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் ஒரே கட்டமாக காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடந்தது.

நெல்லை மாவட்டத்தில் நெல்லை, பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம், நாங்குநேரி, ராதாபுரம் ஆகிய 5 தொகுதிகள் உள்ளன. இதில் பாளையங்கோட்டை தொகுதியில் 68.97 சதவீதம் வாக்குகள் மட்டுமே பதிவானது. இந்தத் தொகுதியில் மாலை 6 மணிக்கு வரிசையில் 1,174 வாக்காள ர்கள் நின்றிருந்தனர்.

அவர்களுக்கு டோக்கன் வழங்கி வாக்கு செலுத்த அனுமதி அளிக்கப்பட்டது. எனினும் 70 சதவீதத்தை கூட எட்டவில்லை. இதன் மூலம் பாளையங்கோட்டை தொகுதி வாக்குப்பதிவு சதவீதத்தில் தமிழ்நாட்டில் கடைசி இடத்தை பிடித்துள்ளது.

தமிழ்நாட்டில் வீரபாண்டி தொகுதி 93.40 சதவீதம் வாக்குகள் பதிவாகி முதலிடம் பிடி த்துள்ளது.

அதே நேரத்தில் படித்தவர்கள் நிறைந்த பாளையங்கோட்டை தொகுதி 68.97 சதவீதம் வாக்குகள் மட்டுமே பதிவாகி கடைசி இடத்தை பிடித்துள்ளது.

சிறப்பு தீவிர திருத்தத்திற்கு (SIR) பிறகு நடந்த முதல் தேர்தல் என்பதால் இந்தத் தேர்தலில் வாக்குப்பதிவு சதவீதம் அனைத்து தொகுதிகளிலும் கவனம் பெற்றது. அதன்படி பல தொகுதிகளிலும் வாக்குப்பதிவு 90 சதவீதத்தை கூட கடந்துள்ளது. நெல்லை மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவிற்காக கலெக்டர் சுகுமார் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பாளையங்கோட்டை தொகுதிக்கு உட்பட்ட கொக்கிர குளத்தில் தான் அமைந்துள்ளது. இங்கு மினி மாரத்தான், பெண்களுக்கு கோலமிடுதல், மனித சங்கிலி, கலை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. எனினும் வாக்கு சதவீதம் குறைந்தது மாவட்ட நிர்வாகம் மற்றும் வாக்காளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# பா.ஜ.க. ஆளும் மணிப்பூரில் மீண்டும் வன்முறை!

## உக்ருல் மாவட்டத்தில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர்!

இம்பால், ஏப். 27- மணிப்பூர் மாநிலம், உக்ருல் மாவட்டத்தின் சில பகுதிகளில் குகிநாகா சமூகத்தைச் சேர்ந்த ஆயுதம் ஏந்திய நபர்களிடையே அண்மை காலமாக தொடர்ச்சியான மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

இதில் பலர் பலியாகியுள்ளனர், வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், உக்ருல் மாவட்டத்தில் இரு சமூகத்தினரிடையே மீண்டும் வன்முறை வெடித்துள்ளது.துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட பலர் காயமடைந்தனர். இரண்டு வீடுகள் தீயிட்டு கொளுத்தப் பட்டன. மணிப்பூரில் கடந்த 2023 இல் பெரும் கலவரம் வெடித்த நிலையில், இது வரையிலான வன்முறைச் சம்பவங்களில் 500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துவிட்டனர். வீடுகளை விட்டு வெளியேறிய ஆயிரக்கணக்கானோர், அரசின் நிவாரண முகாம்களிலேயே தங்கியுள்ளனர்.

### சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில்

# மூன்றாவது ஒருங்கிணைந்த நீலகிரி வரையாடு கணக்கெடுப்பு!

நீலகிரி, ஏப். 27- தமிழ்நாடு அரசு, ‘நீலகிரி வரையாடு திட்டம்’ (Project Nilgiri Tahr) வாயிலாக, ஏப்ரல் 24 முதல் 27, 2026 வரை, மாநிலம் முழுவதும் நீலகிரி வரையாடுகள் வாழும் அனைத்துப்பகுதிகளிலும் மூன்றாவது ஒருங்கிணைந்த கணக்கெடுப்பை மேற்கொண்டுள்ளது. ஆண்டுதோறும் நடைபெறும் இச்செயல்பாடு, தமிழ்நாட்டின் மாநில விலங்கான நீலகிரி வரையாட்டின் நீண்டகாலப் பாதுகாப்புத் திட்டமிடலில் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறது.

இந்தக் கணக்கெடுப்பு கேரள வனத்துறையுடன் ஒருங்கிணைந்து நடத்தப்படுகிறது. இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறையானது, தமிழ்நாடு-கேரள நிலப்பரப்பில் இடம்பெயரும் விலங்குகள் ஒரே நேரத்தில் கணக்கிடப்படுவதை உறுதிசெய்து, இரட்டை கணக்கிடுவதைத் தவிர்க்கிறது. மேலும், இது மேற்குத் தொடர்ச்சி மலைகள் முழுவதும் உள்ள உயிரினங்களின் மிகவும் துல்லியமான நிலவரத்தை அளிக்கிறது.

அக்டோபர் 12, 2023 அன்று தொடங்கப்பட்ட ‘நீலகிரி வரையாடு திட்டம்’ (Project Nilgiri Tahr), தமிழ்நாட்டின் மாநில விலங்கைப் பாதுகாப்பதற்கென்றே அர்ப்பணிக்கப்பட்ட,ஒருமுதன்மையான மற்றும் குறிப்பிட்ட இனத்தை மையமாகக் கொண்ட பாதுகாப்பு முன்னெடுப்பாகும். இத்திட்டமானது பாதுகாப்பு, வாழ்விடமேலாண்மை, இனத்தொகை கண்காணிப்பு ஆகியவற்றுடன், மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் உலகளாவிய நிபுணர்களுடனான ஒத்துழைப்பு வாயிலாக சர்வதேச அறிவியல் தர நிலைகளை ஏற்றுக்கொள்வது என ஒன்பது முக்கியக் கூறுகளை மையமாகக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் குளிர்கால கன்று ஈனும் பருவத்திற்குப்பிறகு, முதிர்ந்த மந்தைகளுடன் இளம் விலங்குகளும் தென்படும்போது, இந்த ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இது, விலங்குகளின் எண்ணிக்கை மற்றும் இனப்பெருக்க வெற்றியை மிகவும் நம்பகமான முறையில் மதிப்பிட உதவுகிறது.

முதல் ஒருங்கிணைந்த கணக்கெடுப்பு (2024), தமிழ்நாட்டில் நீலகிரி வரையாடு பாதுகாப்பிற்கான அடிப்படையை நிறுவியது. இது 13 வனப்பிரிவுகளில் உள்ள 140 கணக்கெடுப்புத் தொகுதிகளை உள்ளடக்கியதுடன், 1,862 கி.மீ. தூரத்திற்கு விரிவான களப்பணியையும் மேற்கொண்டது. முன்னோட்டச் சோதனைகள் மூலம் அறிவியல் முறைகள் தரப்படுத்தப்பட்டன, மேலும் நிலப்பரப்பின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட கணக்கெடுப்பு மற்றும் இரட்டை கணக்கெடுப்பு முறை பின்பற்றப்பட்டது. தமிழ்நாட்டில் வரையாடுகளின் எண்ணிக்கை 1,031 என மதிப்பிடப்பட்டுள்ளது, இது இதன் பரவல் மற்றும் இனக்கூட்டமைப்பு குறித்த விரிவான புரிதலை வழங்குகிறது.

இரண்டாவது ஒருங்கிணைந்த கணக்கெடுப்பு (2025), 14 வனப்பிரிவுகளில் உள்ள 177 கணக்கெடுப்புத் தொகுதிகளுக்கு ஆய்வுப் பரப்பை விரிவுபடுத்தியது. இதில் ஏறக்குறைய 800 களப்பணியாளர்கள் சுமார் 2,000 கி.மீ. தொலைவிற்கு ஆய்வு மேற்கொண்டனர். மேலும், களமதிப்பீடுகள் மற்றும் வரலாற்றுத் தரவுகள் மூலம் 36 புதிய வாழ்விடங்கள் சேர்க்கப்பட்டன. பெரும்பாலான வாழ்விடங்களில் நீலகிரி வரையாடுகள் காணப்பட்டன. பல மந்தைகள் குட்டிகளுடன் காணப்பட்டதால், நிலையான இனப்பெருக்கத்தைக் குறிக்கிறது. பசுமலை போன்ற புதிதாக மீண்டும் குடியேறிய வாழ்விடங்களின் தொடர்ச்சியான பயன்பாட்டையும், ஒரு தசாப்தத்திற்கும் மேலாகக் காணப்படாத பகுதிகளுக்கு இந்த இனம் திரும்பியதையும் இரண்டாவது கணக்கெடுப்பு பதிவு செய்தது. முக்கியமாக, ஆய்வு செய்யப்பட்ட பல நிலப்பரப்பு கள் சங்க இலக்கியங்களில் விவரிக்கப்பட்டுள்ள இடங்களுடன் ஒத்துப் போகின்றன. இது இந்த மலைச்சூழல் அமைப்புகளில் இந்த இனத்தின் நீண்ட கால வரலாற்று இருப்பைப் பிரதிபலிக்கிறது. இரண்டாவது கணக்கெடுப்பின்போது சேகரிக்கப்பட்ட எச்சம் மற்றும் ஊனுண்ணி களின் கழிவு மாதிரிகள், ஒட்டுண்ணிச் சுமை மற்றும் சூழலியல் தொடர்புகளைப் புரிந்து கொள்வதற்காகப் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இது ஒரு ஆழமான பாதுகாப்புத் திட்டமிட லுக்கு உதவியது. இரண்டாவது கணக்கெடுப்பு, ஆய்வு செய்யப்பட்ட வாழ்விடங்களில் 1303 தனிநபர்களைக் கொண்ட ஒரு இனத் தொகையைப் பதிவு செய்துள்ளது.

மூன்றாவது ஒருங்கிணைந்த கணக்கெடுப்பு (2026), அதன் வீச்சிலும் தொழில்நுட்பத்திலும் ஒரு முன்னோடிச் சிறப்பாக அமைகிறது. இது 14 வனக்கோட்டங்கள், 43 வனச்சரகங்கள், 124 வனப்பிரிவுகள் மற்றும் 177 கணக்கெடுப்புத் தொகுதிகளை உள்ளடக்கி, தமிழ்நாடு முழுவதும் 3,100 கி.மீ-க்கும் அதிகமான பரப்பளவை விரிவுபடுத்துகிறது. தெற்கே கன்னியாகுமரியில் உள்ள அஷாம்பு மொட்டை (கடல் மட்டத்திலிருந்து 902மீ உயரம்) முதல் வடக்கே கூடலூரில் உள்ள தவள மலை (கடல்மட்டத்திலிருந்து 986மீ உயரம்) வரை, தமிழ்நாட்டில் இச்சிற்றினத்தின் முழுப்பரப்பளவையும் இக்கணக்கெடுப்பு உள்ளடக்கியுள்ளது.

பயிற்சி பெற்ற சுமார் 800 களப்பணியாளர்கள் இதில் பங்கேற்கின்றனர். முதன்முறையாக, நிகழ்நேரத்தரவு சேகரிப்பு, GPS அடிப்படையிலான கண்காணிப்பு மற்றும் தரப்படுத்தப்பட்ட அறிக்கையிடல் ஆகியவற்றிற்காக, ‘Varudai’ எனும் பிரத்யேக கைபேசி செயலி ஒன்று பயன்படுத்தப்படுகிறது. இந்த எண்ம அமைப்பின் மூலம், களத்திலிருந்து பெறப்படும் தரவுகளை ஏறக்குறைய நிகழ் நேரத்திலேயே ஒருங்கிணைக்க முடிகிறது. தனிமைப்படுத்தப்பட்ட வாழ்விடங்களில் ‘வரையறுக்கப் பட்ட கணக்கெடுப்பு முறையையும்’ (bounded count methods), முக்கூர்த்தி மற்றும் கிராஸ் ஹில்ஸ் போன்ற பரந்த தொடர் நிலப்பரப்புகளில் ‘வரையறுக்கப்பட்ட கணக்கெடுப்பு’ மற்றும் ‘இரட்டை கணக்கெடுப்பு முறைகளும் கலவையையும் இக்கணக்கெடுப்பில் தொடர்ந்து பயன்படுத்தி வருகிறது.

பன்னாட்டு இயற்கை பாதுகாப்பு ஒன்றியம் (IUCN), தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS), இந்தியத் தாவரவியல் ஆய்வு மையம் (BSI) மற்றும் இந்திய வனவிலங்கு அறக்கட்டளை (WTI) உள்ளிட்ட முன்னணி நிறுவனங்களைச் சேர்ந்த, வல்லுநர்கள் மூன்றாம் தரப்புப் பார்வையாளர்களாகப் பங்கேற்பதன் மூலம், இந்த ஆய்வு தொடர்ந்து முன்னெடுக்கப்படும். மூன்று கட்ட ஆய்வுகளிலும் இது ஒரு நிலையான அம்சமாகத் திகழ்ந்து வருவதால், அறிவியல் சார்ந்த துல்லியத்தன்மை மற்றும் தரத்தில் தொடர்ச்சி உறுதி செய்யப்படுகிறது. குளம்புள்ள விலங்குகளின் நடத்தை, கால்நடை மருத்துவ மதிப்பீடு மற்றும் வாழ்விடச் சூழல் ஆய்வு ஆகிய துறைகளில் இவ்வல்லுநர்கள் கொண்டுள்ள ஒருங்கிணைந்த நிபுணத்துவம், இந்த ஆய்வை வலுவான மற்றும் தரப்படுத்தப்பட்ட முறையில் முன்னெடுப்பதற்குத் துணை நிற்கிறது.

மக்கள் தொகை மதிப்பீட்டின் ஆரம்ப கட்ட சுற்றுகளைத் தொடர்ந்து, நீலகிரிவரையாடு திட்டத்தின் கீழ் அவற்றுக்கு தடயம் அறியும் கழுத்து பட்டை (Radio Collar) பொருத்தும் பணி தொடங்கப் பட்டது. இந்தியாவில் இந்த இனத்திற்கு இத்தகைய கண்காணிப்பு முறை பயன்படுத்தப்பட்டது இதுவே முதல் முறையாகும். இந்தத் தரவுகள், வரையாடுகளின் இயக்கம், வாழ்விடப் பயன்பாடு, பருவகாலப் போக்குகள் மற்றும் மக்கள் தொகைகளுக்கு இடையேயான தொடர்பு ஆகியவற்றை அறிந்து கொள்ள உதவின.

நீலகிரி வரையாடு கணக்கெடுப்பானது, மிக முக்கியமாக, தாவரங்கள், நிலப்பரப்பு மற்றும் சீர்குலைவின் அறிகுறிகள் போன்ற வாழ்விட அளவுருக்களைப் பதிவு செய்கிறது. இது, இனத்தொகைத் தரவுகளை வாழ்விடத்தின் நிலைமைகளுடன் தொடர்புபடுத்த உதவுகிறது. நீலகிரி வரையாடு மேற்குத் தொடர்ச்சி மலைகளின் மலைப்புல்வெளி-சோலைப் புறச் சூழல்மண்டலத்தில் காணப்படுகிறது. இந்த உயரமானபுல்வெளிகளும் செங்குத்துப் பாறைகளும் இந்த இனத்திற்கு உகந்த வாழ்விடத்தை வழங்குகின்றன. இதே நிலப்பரப்பு, உள்ளூர் புற்கள், சோலைப்புற மர இனங்கள், நீலகிரி சிட்டு, கரும்-ஆரஞ்சு ஈப்பிடிப்பான், காட்டெருமை மற்றும் சிறுத்தை உள்ளிட்ட பலவகையான உள்ளூர் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு ஆதரவளிக்கிறது. நீலகிரி வரையாடைப் பாதுகாப்பது, நீர் பாதுகாப்பு மற்றும் கால நிலை ஒழுங்குமுறைக்கு இன்றியமையாத இந்த எளிதில் பாதிப்படையக் கூடிய சூழல்மண்டலங்களின் பாதுகாப்பையும் உறுதி செய்கிறது.

தொடர்ச்சியான மூன்று ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கெடுப்புகள் மூலம், தமிழ்நாடு வனத்துறை, உயிரினங்களின் எண்ணிக்கைப் போக்குகளைக் கண்காணிக்கவும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு வழிகாட்டவும் ஒரு சீரான தரவுத் தொகுப்பை உருவாக்கி வருகிறது. இந்தக் கண்டுபிடிப்புகள், வாழ்விட மறுசீரமைப்பு, பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் அந்த இனத்தின் நீண்ட கால மேலாண்மைக்கு வழிகாட்டும். நீலகிரி வரையாடு திட்டம், அதன் இயற்கை வாழிடப்பகுதி முழுவதும் அந்த இனத்தின் நீடித்த பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, களப்பணி, அறிவியல் கண்காணிப்பு மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து ஒருங்கிணைத்து வருகிறது.

# மியான்மரில் மீண்டும் நிலநடுக்கம்!

நேபிடா, ஜன.27– மியான்மர் நாட்டில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் 28ந்தேதி ரிக்டர் 7.7 மற்றும் ரிக்டர் 6.4 அளவில் அடுத்தடுத்து பயங்கர நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. இதனால் அந்த நாட்டின் பல்வேறு பகுதிகளில் பலத்த சேதம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தில் சுமார் 3,700 பேர் உயிரிழந்ததாகவும், 5 ஆயிரத்திற்கும் அதிகமானோர் படுகாயமடைந்ததாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்தது....

இதனை தொடர்ந்து மியான்மரில் அவ்வப்போது சிறிய அளவிலான நிலநடுக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன....

அந்த வகையில், நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் (இந்திய நேரப்படி)... ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.8 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்திருந்தது....

இந்த நிலையில், மியான்மரில் நேற்று மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதிகாலை 2.57 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.2 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது....

90 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 24.113 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 94.550 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த சக்திவாய்ந்த நில நடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை....

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.எம்.தைலப்பன்
### ஏப்ரல் 27 (2015)



இளமைக்காலம் முதல் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு புலவன்காடு கிளைக் கழகச் செயலாளர், ஒரத்தநாடு வட்டக் கழகச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

புலவன்காடு ஊராட்சி மன்றத் தலைவராகவும், மாவட்ட ஊராட்சி உறுப்பினராகவும், 1977ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஒரத்தநாடு தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றிபெற்று சிறப்பாக மக்கள் பணியாற்றி தொகுதி வாழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

விலைவாசி உயர்வு போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், ஈழத் தமிழர் போராட்டம் உள்ளிட்ட தலைமை அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தனது இறுதி காலம் வரை எளிமையாக குடிசை வீட்டில் வாழ்ந்து வந்த இவர் மகளின் திருமண நிகழ்வு குறித்து தலைவர் கலைஞர் அவர்கள் அவரது குடிசைக்கே நேரில் சென்று விசாரித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அரியலூர் பொன். பக்கிரி
### ஏப்ரல் 27 (2015)



அரியலூர் பகுதியில் கழகம் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.

1977ஆம் ஆண்டு முதல் ஏழு முறை அரியலூர் நகரச் செயலாளராகவும் – தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

1996–ல் அரியலூர் பேரூராட்சி மன்றத் தலைவராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.